www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

33. கிராமப்புறக் குடியிருப்பின் வகைகள் யாவை? ஏதேனும் மூன்றினைப் பற்றி விரிவாக எழுதவும்.

34. இந்திய அரசியலமைப்பு சட்டம் சமத்துவத்திற்கான உரிமையை எவ்வாறு பாதுகாக்கிறது?

35. உற்பத்தியின் வகைகளை விரிவாக எழுதுக.

## பகுதி – IV

**VII. வரைபடத்தில் குறிக்கவும்.** 5 x 1 = 5

36. கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

i. பரமாரர்கள்

ii. பாலர்கள்

iii. புது டெல்லி

iv. நாளந்தா

v. சோழர்கள்



C

# முதல் பருவத்தேர்வு – 2024

# தொகுத்தறி மதிப்பீடு – சமூக அறிவியல்

**வகுப்பு : 7** **மதிப்பெண்கள் : 60**

**காலம் : 2.00 மணி**

---

## பகுதி – I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** 6 x 1 = 6

1. கீழ்க்காண்பனவற்றுள் சோழர்களின் நிர்வாகத்தில் மிகச் சிறிய அலகு எது?

அ) மண்டலம் ஆ) நாடு இ) கூற்றம் ஈ) ஊர்

2. ___________ மாம்லுக் அரச வம்சத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

அ) முகமது கோரி ஆ) ஜலாலுதீன்

இ) குத்புதீன் ஐபக் ஈ) இல்துமிஷ்

3. குற்றால நீர்வீழ்ச்சி ___________ ஆற்றின் குறுக்காக அமைந்துள்ளது.

அ) காவேரி ஆ) பெண்ணாறு இ) சிற்றாறு ஈ) வைகை

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்று மற்றும் காரணத்தை கருத்தில் கொண்டு சரியான விடையைக் கண்டறியவும்.

கூற்று : புவியின் உருவத்தை ஒரு ஆப்பிளோடு ஒப்பிடலாம்.

காரணம் : புவியின் உட்பகுதியானது மேலோடு, மெல்லிய புறத்தோல், புவிக்கருவம் ஆகியவற்றைக் கொண்டது.

அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரி ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு.

ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5. இந்தியாவில் காணப்படும் கட்சி முறை

அ) ஒரு கட்சி முறை ஆ) இரு கட்சி முறை

இ) பல கட்சி முறை ஈ) இவற்றுள் எதுவுமில்லை

6. பயன்பாட்டின் வகைகளாவன ________.

அ) வடிவப் பயன்பாடு ஆ) காலப் பயன்பாடு

இ) இடப் பயன்பாடு ஈ) மேற்கண்ட அனைத்தும்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 4 x 1 = 4

7. ________ தஞ்சாவூரிலுள்ள புகழ்பெற்ற பிரகதீஸ்வரர் கோவிலை நிர்மாணித்தார்.

8. ________ குடியிருப்பானது வழிபாட்டுத் தலங்களைச் சுற்றி அமைந்திருக்கும்.

9. நமது நாட்டின் ஒவ்வொரு கட்சியும் ________ என்ற அமைப்பில் பதிவு செய்தல் வேண்டும்.

10. ________ என்பது மனித உற்பத்தியில் ஒரு இடு பொருள்.

**III. பொருத்துக.** 5 x 1 = 5

11. கங்கைகொண்ட சோழபுரம் – ஆப்பிரிக்கர்கள்

12. நீக்ரோ இனம் – தொழில் முனைவோர்

13. மக்களாட்சி – ஜப்பானிய சொல்

14. புதுமை புனைபவர் – மக்களின் ஆட்சி

15. சுனாமி – சோழர்களின் தலைநகர்

**IV. சரியா அல்லது தவறா என எழுதுக.** 3 x 1 = 3

16. ரஸ்ஸியா திறமை மிக்க, மனவலிமை கொண்ட போர் வீரர்.

**17. பொருந்தாததைக் கண்டுபிடி.**

பொறிப்புகள், பயண குறிப்புகள், நினைவுச்சின்னங்கள், நாணயங்கள்

**18. பொருந்தாததைக் கண்டுபிடி.**

ஸ்ட்ராம்போலி, ஹெலன், ஹவாய், பியூஜியாமா

**19. i) வேறுபடுத்துக.** 2+1=3

கிளையாறு மற்றும் துணையாறு (அல்லது)

மொழி மற்றும் மதம்

**ii) காரணம் கூறு.**

மும்பை ஒரு மிகப்பெரிய நகரம்.

**பகுதி – II**

**V. கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி (ஏதேனும் 7).** 7x2=14

20. நாலாயிர திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?

21. தொடக்ககாலம் முதல் இரு கலிஃபாத்துகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

22. காணிக்கடன் பற்றி எழுதுக.

23. கி.பி. (பொ.ஆ) 12 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் முஸ்லீம் ஆட்சியை நிறுவியவர் யார்?

24. எரிமலை என்றால் என்ன?

25. பனியாற்று அரித்தலினால் ஏற்படும் முதன்மை நிலத் தோற்றங்களை குறிப்பிடவும்.

26. இனங்களின் வகைகள் யாவை?

27. குடிமை சமத்துவம் என்றால் என்ன?

28. இரு கட்சி முறை காணப்படும் நாடுகளின் பெயர்களை எழுதுக.

29. மூலதனத்தின் வடிவங்கள் யாவை?

**பகுதி – III**

**VI. விரிவான விடையளி (ஏதேனும் 4).** 4x5=20

30. சோழர்களின் ஆட்சித் திறம் பற்றிய ஐந்து முக்கிய அம்சங்களை விவரித்து எழுதவும்.

31. சிந்துவை அரேபியர் கைப்பற்றியதின் தாக்கங்கள் யாவை? ஏதேனும் ஐந்தைக் குறிப்பிடவும்.


32. காற்றின் செயல்களால் ஏற்படும் நிலத் தோற்றங்களை விளக்குக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

நிலை–7 மொத்த மதிப்பெண்கள்: 60

## முதல்பருவத்தேர்வு 2024–2025 (Set– C)

## சமூக அறிவியல் – விடைக்குறிப்புகள்(தமிழ்/English)

| I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்/ Choose the correct answer. | | 6X1=6 |
|---|---|---|
| 1. | அ) மண்டலம் | a) Mandalam |
| 2. | இ) குத்புதீன் ஐபக் | c) Qutb-ud-din Aibak |
| 3. | இ) சிற்றாறு | c) Chittar |
| 4. | கூற்றும் காரணமும் சரி ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை | b) A and R are correct but R does not explain A |
| 5. | இ) பல கட்சி முறை | c) Multi-party system |
| 6. | மேற்கண்ட அனைத்தும் | d) all of these |
| II. கோடிட்ட இடத்தை நிரப்புக / Fill in the blanks. | | 4X1=4 |
| 7. | முதலாம் ராஜராஜன் | Rajaraja I |
| 8. | யாத்திரைக் | Pilgrim |
| 9. | தேர்தல் ஆணையம் | Election Commission of India |
| 10. | உழைப்பு | Labour |
| III.பொருத்துக / Match the following. | | 5X1=5 |
| 11. | சோழர்களின் தலைநகர் | Capital of Cholas |
| 12. | ஆப்பிரிக்கர்கள் | African |
| 13. | மக்களின் ஆட்சி | Rule of the people |
| 14. | தொழில்முனைவோர் | Entrepreneur |
| 15. | ஜப்பானிய சொல் | Japanese Term |
| IV.சரியா? தவறா? / True or False. | | 3X1=3 |
| 16. | சரி | True |
| 17. | பயணக்குறிப்புகள் | Travelogues |
| 18. | ஹவாய் | Hawaii |
| 19. | i) வேறுபடுத்துக அ) | i) Distinguish a) 2+1=3 |

| கிளையாறு | துணையாறு |
|---|---|
| ஒரு முதன்மை ஆற்றிலிருந்து பிரிந்து விலகிச் செல்லும் ஆறு. | ஒரு முதன்மை ஆற்றுடன் இணையும் அல்லது ஆற்றினுள் பாயும் ஒரு நீரோடை அல்லது ஓர் ஆறு |
| எடுத்துக்காட்டு: கொள்ளிடம் | எடுத்துக்காட்டு: பவானி |

| Tributary | Distributary |
|---|---|
| A stream or river that flow into and joins a main river. | A stream that branches off and flows away from a main stream. |
| Example: kollidam | Example: Bavani |

ஆ)

| மொழி | மதம் |
|---|---|
| சமுதாய அமைப்பிற்கு கலாச்சாரத்தைப் பரப்பும் ஒரு பிரதான கருவியாகும். | குறிப்பிட்ட நம்பிக்கையும், வழிபாட்டு முறையும் கொண்டதாகும். |
| ஒருவர் மற்றொருவருடன் தொடர்பு கொள்வதற்கு எழுத்து வடிவிலோ அல்லது ஒலி வடிவிலோ பயன்படுகிறது. | மனிதர்களை மனித சமுதாயத்துடன் சேர்க்கிறது. |
| அரசியல், பொருளாதார, சமூக மற்றும் மத செயல்பாடுகள்ன் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள வழி வகுக்கிறது. | ஒரு குழுவின் அடையாளமாகவும், கலாச்சார புத்துணர்வின் அடையாளமாகவும் திகழ்கிறது. |

B)

| Language | Religion |
|---|---|
| Language is a great force of socialization. | Religion means a particular system of faith and worship, |
| Language, either in the written or oral form, is the most common type of communication. | It brings human being with human society. |
| Language promotes the transmission of ideas and the functioning of political, economic, social and religious systems. | It is a symbol of group identity and a cultural rallying point. |

**ii)காரணம் கூறுக :**
**மும்பை ஒரு மிகப்பெரிய நகரம்**
மும்பை 10 மில்லியனுக்கு மேல் மக்கள் தொகை கொண்ட மிகப்பெரிய நகரமாகும்.

**ii)Give Reason:**
**Mumbai is a mega city**
Mumbai is a very large city typically with a population of more than 10 million people.

V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி / Answer the following. 7X2=14

| | | |
|---|---|---|
| 20. | நாதமுனி | Nathamuni |
| 21. | "உமையத்துகளும்" "அப்பாசித்துகளும்" தொடக்கக்கால கலீஃபத்துகளாகும். | Two early Caliphates were 'Umayyads' and the 'Abbasids'. |
| 22. | சோழஅரசின் பொதுவருவாய் முக்கியமாக நிலவரி மூலம் பெறப்பட்டது. நிலவரியானது 'காணிக்கடன்' என அழைக்கப்பட்டது. | The revenue of the Chola state came mainly from the land. The land tax was known as Kanikadan. |
| 23. | முகம்மது கோரி | Muhammad Ghori |
| 24. | புவியின் மேற்பரப்பில் உள்ள பிளவு அல்லது துளை வழியே வெப்பம் மிகுந்த மாக்மா (Magma) என்னும் பாறைக்குழம்பு வெளியேறுவதையே எரிமலை என்கிறோம். | A volcano is a vent or an opening in the earth's crust through which hot magma erupts from deep below the surface. |
| 25. | சர்க், அரட்டுகள்,'U'வடிவ பள்ளத்தாக்கு | Cirque, Tarn Lake, Arete, U' Shaped Valley |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 26. | காக்கச இனம் , நீக்ரோ இனம் , மங்கோலிய இனம் , ஆஸ்ட்ரலாய்டு இனம் | Caucasoid ,Negroid , Mongoloid , Australoid |
| 27. | அனைத்து குடிமக்களும் குடியியல் உரிமைகளை அடைதல் வேண்டும் என்பதே குடிமை சமத்துவம் ஆகும். | Civil equality is enjoyment of civil rights by all citizen. |
| 28. | இருகட்சி முறை பிரிட்டன் (தொழிலாளர் கட்சி மற்றும் பழமைவாதக் கட்சி), அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி) காணப்படுகின்றன.) | Bi-Party system can be seen in U.K. (the Labour Party and the Conservative Party) and in U.S.A (the Republican Party and the Democratic Party) |
| 29. | மூலதனம் என்பது பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக மனித முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும். | Capital is man made physical goods used to produce other goods and services. |
| VI. விரிவான விடையளி/ Answer in Detail. | | 4X5=20 |
| 30. | சோழ அரசர்கள் நன்கு கட்டமைக்கப்பட்ட நிர்வாக முறையை உருவாக்கியிருந்தனர். பல்வேறு அமைப்புகள் மூலம் நடைபெற்ற சோழர்களின் உள்ளாட்சி நிர்வாகம் ஒரு மிகச் சிறந்த அம்சமாகும்.<br><br>சோழ மன்னர்கள் விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். பல வாய்க்கால்களை வெட்டினர்.<br><br>அவர்கள் தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், தராசுரம் ஆகிய இடங்களில் கோயில்களைக் கட்டினர்.<br><br>நடனம், இசை, நாடகம், கட்டக்கலை மற்றும் ஓவியக் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.<br><br>சோழப் பேரரசர்கள் கல்விப்பணிக்குப் பெரும் ஆதரவு கொடுத்தனர். பல கல்லூரிகளை நிறுவினர். | The Chola rulers established a well organized system of administration in which the empire was divided into mandalans, naadu, Kurrams and gramam.<br><br>A very efficient local administration was another important feature of the Chola rule.<br><br>Chola gave importance to irrigation – vati-vaykkal, ur-vaykkal and nadu-vaykkal ensured proper distribution of water.<br><br>Rajendra I established a Vedic college at Ennayiram.<br><br>The Chola rulers built the famous temples in Thanjavur, Gangaikonda Cholapuram and Darasuram. Chola Kings were great patrons of learning. Trade flourished during their period. |
| 31. | அராபிய அறிஞர்கள் பல இந்திய இலக்கியங்களைக் கற்றனர்.<br><br>சமஸ்கிருத மொழியிலிருந்த வானியல், தத்துவம், கணிதம், மருத்துவம் தொடர்பான பல நூல்களை அவர்கள் | 31.Islam was spread over Indian regions.<br><br>Arab Scholars translated Sanskrit books into Arabic.<br><br>The importance of zero was learned by Arabs from India. |

| | | |
|---|---|---|
| | அராபிய மொழியில் மொழியாக்கம் செய்தனர்.<br><br>0 முதல் 9 வரையிலான எண்களை அவர்கள் இந்தியாவிலிருந்தே கற்றுக் கொண்டனர்.<br><br>பூஜ்யத்தின் பயன்பாட்டை கற்றுக் கொண்டனர்.<br><br>இந்தியர்களிடமிருந்து சதுரங்க விளையாட்டைக் கற்றுக் கொண்டனர்.<br><br>காற்றின் செயல்களால் ஏற்படும் நிலத்தோற்றங்கள்: காளான் பாறைகள்: பாலைவனத்தில் காற்றின் வேகமான செயல்பாடு, பாறையின் மேற்பகுதியை விட கீழ்ப்பகுதியை வேகமாக அரிக்கின்ற காரணத்தினால் அப் பாறைகளின் மேற்பகுதி அகன்றும் அடிப்பகுதி குறுகலாகவும் காணப்படுகிறது.<br><br>இவ்வாறான காளான் வடிவ பாறைகளை பாலைவனப் பகுதிகளில் காண இயலும். இவை காளான் பாறைகள் எனப்படும். | The Arabs learned the numerals 0 to 9 from India.<br><br>The people in the west and the Arabs learned the game of chess from the Indians. |
| 32. | காற்று அரிப்புத் தனிக்குன்றுகள்:<br>ஒரு தனித்துவிடப்பட்ட எஞ்சிய குன்று வட்டமான தலைப்பகுதியுடன் நிற்கும் ஒரு தூண்போன்று காட்சி அளிப்பது காற்று அரிப்புத் தனிக்குன்றுகள் எனப்படும்.<br><br>மணல் குன்றுகள்:<br>காற்று வீசும்போது மணலை ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு கடத்துகின்றது. காற்று வீசுவது நிற்கும்போது மணலானது உயரம் குறைவான குன்றுகள் போன்று படிய வைக்கின்றது. இப்படிவுகள் மணல்குன்றுகள் எனப்படும். | 32. By the wind, erosion, and deposition the different types of land formed.<br><br>Mushroom Rocks:<br>In deserts, the rocks in the shape of Mushroom commonly called Mushroom Rocks.<br><br>Inselbergs:<br>The eroded hill standing like a pillar with rounded tops are called Inselbergs.<br><br>Sand Dunes:<br>As the wind blows the sand transformed and deposited in low hill like structures called sand Dunes. |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | பிறைவடிவ மணல் குன்றுகள் :<br>பிறைச் சந்திர தோற்றமுடன் கூடிய மணல் மேடுகள் பிறைவடிவ மணல் குன்றுகள் எனப்படும்.<br><br>காற்றடி வண்டல் படிவுகள்:<br><br>மணல் துகள்கள் மிக லேசாகவும் மற்றும் எடை குறைவாகவும் இருக்கும் போது காற்று நீண்ட தொலைவிற்கு கடத்திச் செல்கின்றது. இவ்வாறு கடத்தப்பட்ட மணல் ஒரு பெரும் பரப்பில் படிவதை காற்றடி வண்டல் படிவுகள் என்கிறோம். | Barchans.<br>The crescent-shaped sand dunes are called Barchans.<br><br>Loess:<br>Very fine and light sand is deposited in large areas is called Loess. |
| 33. | கிராமப்புறக் குடியிருப்புகள் அவற்றின் அமைப்பின் அடிப்படையில் நேர்கோட்டு, செவ்வகமான, வட்டமான, நட்சத்திர வடிவமான கிராமம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>நேர்கோட்டு குடியிருப்பு:<br>சாலைகள், இருப்புப்பாதைகள், ஆறு அல்லது கால்வாய், பள்ளத்தாக்கின் சரிவு ஆகியவற்றிற்கு அருகில் கட்டப்பட்ட வீடுகளின் தொகுப்பு நேர்கோட்டு குடியிருப்பு எனப்படும்.<br><br>எடுத்துக்காட்டு :<br>இமயமலை, ஆல்ப்ஸ், ராக்கி மலைத்தொடர்.<br><br>செவ்வக வடிவக் குடியிருப்பு:<br>இவ்வகைக் குடியிருப்புகள் பெரும்பாலும் செவ்வக வடிவில் நீளமானதாகவும் ஒன்றையொன்று நேர்கோணத்திலும் சந்தித்துக் கொள்ளும். செவ்வக வடிவக் குடியிருப்புகள் சமவெளிப் பகுதிகள், மலைகளுக்கிடையே உள்ள பள்ளத்தாக்குகளில் காணப்படுகின்றன.<br><br>எடுத்துக்காட்டு : சட்லஜ்<br>வட்டவடிவக் குடியிருப்பு: | A rural settlement pattern is a function of relief, climate, water supply, and socio-economic factors. It is broadly classified under the following patterns, such as Linear, Rectangular, Circular, Star-like pattern, etc.,<br><br>In a Linear settlement, houses are arranged along either side of a road, railway line, river (or) canal, the edge of a valley, etc., E.g. the Himalayas the Alps, the Rockies.<br>The rectangular settlements are almost straight, meeting each other at right angles. Such a settlement is found in plain areas (or) intermontane plain. E.g.,Sutlej.<br>Houses built around a central area are known as Circular pattern of settlements. Such settlements develop around lakes and tanks. |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ஒரு மையப்பகுதியை சுற்றி வட்ட வடிவமாகக் காணப்படும் குடியிருப்புகளை வட்டவடிவக் குடியிருப்புகள் என்கிறோம். இவை ஏரிகள், குளங்களைச் சுற்றிக் காணப்படும். | |
| 34. | இந்திய அரசியலமைப்பில் சமத்துவம் :<br><br>உலகின் அனைத்து நாடுகளின் அரசியல் அமைப்புகளும் அதன் மக்களுக்கு சமத்துவத்தை உறுதி அளித்துள்ளன. இதே போன்று இந்திய அரசியலமைப்பு அதன் குடிமக்களுக்கு அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் 14<br><br>18 மூலம் சமத்துவத்தை அளிக்கிறது.<br><br>சட்டப்பிரிவு 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம் என உத்தரவாதம் அளிக்கிறது.<br><br>சட்டப்பிரிவு 15 – பாகுபாட்டை தடை செய்கிறது.<br><br>சட்டப்பிரிவு 16 – பொது வேலை வாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கிறது.<br><br>சட்டப்பிரிவு 17 – தீண்டாமையை ஒழிக்கிறது.<br><br>சட்டப்பிரிவு 18 – பட்டங்கள் அளித்து வேறுபடுத்துதலை தடை செய்கிறது.<br><br>சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும்<br><br>சட்டத்தின்படி சமமான பாதுகாப்பு என்பது அரசியலமைப்பு சட்டப்பிரிவு 21 ல் மேலும் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது. | The constitution of India has also guaranteed equality to all citizens by providing Articles form 14-18.<br><br>Article 14 – guarantees to all the people equality before the law.<br><br>Article 15 – deals with the prohibition of discrimination.<br><br>Article 16 – provides equality of opportunity in matters relating to employment.<br><br>Article 17 – abolishes the practice of untouchability.<br><br>Article 18 – abolishes the titles conferred to citizens.<br><br>Equality before the law and equal protection of the law has been further strengthened in the Indian constitution under Article 21. |
| 35. | உற்பத்தியின் வகைகள்:<br>உற்பத்தியில் மூன்று வகைகள் உள்ளன. அவை | There are three types of production<br><br>Primary production<br>Secondary production<br>Tertiary or service production<br>1. Primary Production: |


www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | முதன்மை நிலை உற்பத்தி:<br><br>இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களை, நேரடியாகப் பயன்படுத்திச் செய்கின்ற செயல்பாட்டு நிலை முதன்மை நிலை உற்பத்தி எனப்படும். இதில் வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் வேளாண்மைத்துறை உற்பத்தி' எனவும் கூறுவர்.<br><br>வேளாண் தொடர்புடைய செயல்கள், வனப்பாதுகாப்பு, மீன்பிடித்தல், சுரங்கத்தொழில், எண்ணெய் வளம் பிரித்தெடுத்தல் ஆகியவை முதன்மை நிலை உற்பத்தி ஆகும்.<br><br>இரண்டாம் நிலை உற்பத்தி:<br><br>முதன்மை நிலையின் உற்பத்திப் பொருட்களை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி, புதிய உற்பத்திப் பொருட்களை உருவாக்கும் செயல்பாடு இரண்டாம் நிலை உற்பத்தி எனப்படும். இதை 'தொழில்துறை உற்பத்தி' எனவும் கூறுவர்.<br><br>நான்கு சக்கர வாகனங்கள், ஆடைகள், இரசாயனப் பொருட்கள் தயாரிப்பு, பொறியியல் மற்றும் கட்டடப் பணிகள் இரண்டாம் நிலை உற்பத்தி ஆகும்.<br><br>மூன்றாம் நிலை உற்பத்தி:<br><br>முதன்மை மற்றும் இரண்டாம் நிலைகளின் உற்பத்திப் பொருட்களைச் சேகரிப்பதும் பரிமாற்றம் செய்வதும் மூன்றாம் நிலை உற்பத்தியாகும். சேவைக்கு முதலிடம் அளிக்கப்படுவதால் 'சேவைத்துறை உற்பத்தி' எனவும் கூறுவர். | Primary production is industries that are extracting the gifts of nature from the earth's surface and oceans.<br>Ex: fishing, mining, agriculture.<br>2. Secondary Production:<br><br>It is the manufacturing industry, conversion of raw material into finished good.<br>Ex: Manufacture of clothes, cars and chemicals.<br>3. Tertiary production:<br><br>In the tertiary sector, all those services enable the finished goods to be put in the hands of consumers.<br>Ex: Banking, transport, and communications. |


| | | |
|---|---|---|
| | வாணிகம், வங்கி, காப்பீடு, போக்குவரத்து, செய்தித் தொடர்பு, சட்டம், நிர்வாகம், கல்வி, உடல்நலம் சார்ந்த நிறுவனங்கள் அனைத்தும் சேவைத்துறை நிறுவனங்கள். | |

VI. வரைபடத்தில் குறிக்கவும்./ Map 5X1=5

36)




www.Padasalai.Net




www.Padasalai.Net